**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No.107/2022 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW – 7 |
| | Defence |
| | Court |
| Name | நித்தியானந்தம் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 10th day of July 2026.

Signature of Witness

Name of the Interpreter: Tmt. V.Mohana, Head Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 10th day of July 2026.

Signature of Interpreter

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது காஞ்சிபுரம் மாவட்ட குற்ற பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 16.07.2022 அன்று காலை 8.30 மணியளவில் நிலைய ஆஜரில் இருந்த போது அன்பு, த/பெ.ராமன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்றேன். புகாரின் மீது பி4 பாலுச்செட்டிசத்திரம் காவல் நிலைய குற்ற எண். 366/2022 பிரிவு 294பி, 392, 397, 506(ii) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். அன்றே காலை 9.30 மணிக்கு சம்பவ இடம் கீழ்கதிர் பிஆர் பஞ்சாபி தாபா சென்று சம்பவ இட சாட்சிகளான பிரபாகரன், ராகுல் ஆகியோர் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும். பின்னர் சம்பவ இட சாட்சிகளான பிரபாகரன், மோகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது புலன் விசாரணையில் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவரவே எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் தாமல் ஏரி கலங்கல் அருகே நின்று கொண்டிருந்த இவ்வழக்கிற்கு சம்பந்தப்பட்ட எதிரிகளை அடையாளம் கண்டு 1. மணிமாறன், 2. துளசிராமன் ஆகியோர்களை கைதுக்கு உண்டான காரணங்களை கூறி பகல் 12.30 மணிக்கு கைது செய்தேன். பின்னர் முதல் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்ட தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தை சாட்சிகள் பாஷா, பரந்தாமன் ஆகியோர் முன்பு பகல் 12.45 மணிக்கு பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் முதல் எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பகல் 14.00 மணிக்கு

கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6 ஆகும். அந்த கத்தி சா.பொ.1 ஆகும். கொள்ளை அடித்த பணம் ரூபாய் 200/– ஐ கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அது சா.பொ.2 ஆகும். பின்னர் 2ம் எதிரி துளசிராமன் குற்றத்தை ஒப்புக்கொண்டு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் 14.30 மணிக்கு பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7 ஆகும். பின்னர் 2வது எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பகல் 15.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 ஆகும். அந்த கத்தி சா.பொ.3 ஆகும். பின்னர் எதிகளுடன் கைப்பற்றிய சொத்துடன் 17.00 மணிக்கு நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ.9 ஆகும். பின்பு வழக்கு விசாரணை முடித்து 18.07.2022 அன்று எதிரிகள் மீது 294பி, 392, 397, 506(ii) இதசவின் கீழ் விசாரணை செய்து வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகாரில் புகார்தாரர் எந்த தேதியில் கொடுத்தார் என்று இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் காலம் 8ல் புகார் கால தாமமாக கொடுத்த காரணம் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் காலம் 14ல் புகார்தாரரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்கமூலம் யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றும் யாரால் நகல் எடுக்கப்பட்டது என்ற விவரமும் இல்லை என்றால் சரிதான். 1வது எதிரியிடம் விசாரணை எத்தனை மணிக்கு ஆரம்பித்து எத்தனை

மணிக்கு முடிக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. காவல் அடைப்பு அறிக்கையில் விசாரணை தொடங்கப்பட்ட நேரம் உள்ளது ஆனால் முடிவுற்ற நேரம் இல்லை என்றால் சரிதான். 1ம் எதிரி மற்றும் 2வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் இடையே எவ்வளவு கால இடைவெளி இருந்தது என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி கொடுத்த 9 பக்க ஒப்புதல் வாக்குமூலம் குறிப்பிட்டுள்ள நேரத்தில் தட்டச்சு செய்ய வாய்பில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றும் யாரால் நகல் எடுக்கப்பட்டது என்ற விவரமும் இல்லை என்றால் சரிதான். வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அருகில் உள்ள கடைக்காரரை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாபா காலை 11.00 மணிக்கு தொடங்கி இரவு 10.0 வரைதான் இருக்கும் காலை 7.00 மணிக்கு இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. இந்த தாபா தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது என்றால் சரிதான். தாபாவில் எதிரிகள் தகராறு செய்தார்கள் என்று நிரூபிக்கும் CCTV பதிவி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளாதா என்றால் இல்லை. கத்தியின் நீளம், அகலம் குறித்த விவரம் இல்லை என்றால சரிதான். வழக்கு சொத்து ரூபாய் 200 வரிசை எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன தேதியில் எந்த வித சம்பவமும் நடக்கவில்லை என்றும் எதிரிகள் மீது எந்த விசாரணையும் இல்லாமல் புள்ளி விவர கணக்கிற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு இவ்வழக்கிற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/– J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.